பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 ஆனி 04 வெள்ளிக்கிழமை 18.06.2021 கதிர் 91

## யாழ். நகரில் திருட்டில் ஈடுபட்டவர்கள் கைது!

**(இ.கலையமுதன்)**

பயணக் கட்டுப்பாட்டு காலத்தில் யாழ்ப் பாணத்தில் இரு வேறு இடங்களில் திருட்டில் ஈடுபட்ட இருவரை மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவினர் கைதுசெய்துள்ளனர்.

இதன்படி யாழ். நகரப் பகுதியில் அமைந் துள்ள லங்கா ரைய்லஸ்ஸ் நிறுவனத்தினுள் நுழைந்து ஒரு லட்சத்து 24

2

# ஜூன் 21 பயணத் தடை தளர்வு; 23 இரவு மீண்டும் அமுல்

## 25 ஆம் திகதி அதிகாலை மீளவும் நீக்கம்



**இலங்கையில் தற்போது அமுலில் உள்ள பயணத் தடை தொடர்பில் புதிய அறிவிப்பொன்றைக் கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலை வரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா இன்று வெளியிட்டுள்ளார்.**

**அதன்படி நாடளாவிய ரீதியில் அமுல்படுத்தப்பட்டுள்ள பயணத் தடை எதிர்வரும் 21ஆம் திகதி அதிகாலை 4 மணியுடன் தளர்த் தப்படுகின்றது என அவர் அறிவித்துள்ளார்.**

2

நாட்டை நேசிக்கும்

## புதிய தலைவரை தேடுகின்றோம்!

### முருந்தெட்டுவே தேரர் கருத்து



நாட்டை நேசிக்கும் – நாட்டை முன்னோக் கிக் கொண்டு செல்லக் கூடிய எதிர்கால மக் கள் தலைவனைத் தேட வேண்டும் என்று வண. முருந்தெட்டுவே ஆனந்த தேரர் தெரி வித்துள்ளார்.

2

## தெஹிவளை மிருகக்காட்சி சாலையில் ஆண் சிங்கத்துக்கு கொரோனா உறுதி



தெஹிவளை மிருகக்காட்சி சாலை யிலுள்ள சிங்கமொன்றுக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள் ளது.

ஆண் சிங்கமொன்றுக்கே இவ்வாறு கொரோனாத் தொற்று உறுதி செய்யப் பட்டுள்ளது என வன ஜீவராசிகள் இரா ஜாங்க அமைச்சர் விமலவீர திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த சிங்கம் கடந்த 3 நாள்களாக

2



## பஸில் ராஜபக்ஷ நாடு திரும்பியதும் மற்றுமொரு நாடகம்

பஸில் ராஜபக்ஷ நாடு திரும்பிய கையோடுஎரிபொருள்களின்விலைகுறைப்பு என்ற நாடகம்கூட அரங்கேற்றப்படலாம் என்று பிரதான எதிர்க்கட்சியான

2

## 150 அடி பள்ளத்தில் பஸ் விழுந்து விபத்து; சாரதி பரிதாப மரணம்!



பலாங்கொடை – ராசாகலை வீதியில் எல்லேவத்த பகுதியில் 150 அடி பள்ளத்தினுள் பஸ் விழுந்து விபத்துக்குள்ளானதில் சாரதி உயிரிழந்துள்ளார்.

தேயிலை தொழிற்சாலை ஊழியர்களை வீடுகளில் இறக்கிவிட்டுத் திரும்பும்போதே குறித்த விபத்து இடம்பெற் றுள்ளது.

2

## அனுமதியின்றி டிரக்டரில் மணல் ஏற்றிவந்தவர் வசமாக சிக்கினார்



**(இ.கலையமுதன்)**

முழுநேரப் பயணத்தடை நேரத்தில் அனுமதிப் பத்திரமின்றி டிரக்டரில் மணல் ஏற்றிச் சென்ற ஒருவர் யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இன்று காலை கொக்குவில் – குளப்பிட்டி சந்தியருகே அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றி வந்த வரையே பொலிஸார் கைது செய் துள்ளனர்.

2

## குடாநாட்டில் விதி மீறி கல்யாணம்: கைவரிசை காட்டியது கொரோனா

### இதுவரை 13 பேருக்குத் தொற்று

**(இ.கலையமுதன்)**

யாழ்ப்பாணம், சண்டிலிப்பாய் சுகாதார வைத் திய அதிகாரி பிரிவில் கொரோனா விதிகளை மீறி இடம்பெற்ற திருமண நிகழ்வில் கலந்துகொண்ட13 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதியாகியுள் ளது.

பண்டத்தரிப்பு பகுதியில் கடந்த 4ஆம் திகதி சுகாதாரப் பிரிவின் அறிவுறுத்தல்களை மீறி நடைபெற்ற திருமண நிகழ்வில் கலந்துகொண்ட வர்கள் தனிமைப்படுத்தப்பட்டனர்.

அவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டிருந்த 78 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள் ளப்பட்டதில் 13 பேருக்குத் தொற்று உறுதியாகி யுள்ளது.

2

## சொகுசு வாகனங்களை மக்களுக்காக அர்ப்பணித்து பௌத்த தேரர்கள் முன்மாதிரியாக நடக்க வேண்டும்

### மனோ கணேசன் எம்.பி. வலியுறுத்து



வண. எல்லே குணவன்ஸ தேரர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது சம்பளத்தை பொது காரியங்களுக்காக அர்ப்பணிக்க வேண்டும் எனக் கூறுகிறார். இது நல்ல யோசனை. ஆனால், அதற்கு முன், இந்நாட்டை மாறி மாறி ஆட்சி செய்த எல்லா அரசுகளும், தேரர்களை தம்வசம் வைத்துக்கொள்ள, வழங்கிய பென்ஸ், ரேஞ்ரோவர், டொயோடா போன்ற சொகுசு வாகனங்களையும், ஆலய சொத்துக் களையும், வரப்பிரசாதங்களையும், பொதுக்காரியங்களுக்காக வழங்கி, பிரபல வண. தேரர்கள்தான் முன்மாதிரியாக இந்த பணியினை ஆரம்பித்து வைக்க வேண்டும்.

– இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்துள்ளார்.

2

## ஜுன் 21...............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதேநேரம் எதிர்வரும் 23ஆம் திகதி இரவு 10 மணி முதல் 25ஆம் திகதி அதிகாலை 4 மணி வரையில் மீண்டும் பயணத் தடை அமுலாக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனினும், பயணத் தடை தளர்த்தப்படும்போதும் மாகாணங்களுக்கு இடையிலான பயணக் கட்டுப்பாடானது தொடர்ந்தும் அமுலில் இருக்கும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, உறவினர், நண்பர்கள் வீடுகளில் ஒன்றுகூடுவதற்கான தடையும் தொடர்ந்து அமுலில் இருக்கும் எனவும் இராணுவத்தளபதிகூறியுள்ளார்.

அத்துடன், கடற்கரைகள், பூங்காக்கள் உள்ளிட்ட பொது இடங்களில் ஒன்று கூடவும் தடை விதிக்கப்படும் எனவும் அவா குறிப்பிட்டுள்ளார்.

அதேபோன்று திருமண நிகழ்வுகள், பொதுக் கூட்டங்கள் உள்ளிட்டவற்றுக்கான தடையும் தொடர்ந்து அமுலில் இருக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## அனுமதியின்றி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தநிலையில், மணல் ஏற்றிவந்த டிரக்டர் பொலிஸாரால் யாழ்ப் பாணம் பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் செல்லப்பட்ட அதேவேளை சந்தேக நபரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## 150 அடி பள்ளத்தில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விபத்து இடம்பெற்றபோது பஸ்ஸினுள் சாரதி மாத்திரமே இருந்த நிலையில் விபத்தில் அவர் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## தெஹிவளை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நோய் வாய்ப்பட்டிருந்தமையால், மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப மருத்துவ பரிசோதனைகளுக்கமைய, இருமல் மற்றும் தொண்டை நோவினால் சிங்கம் அவதிப்படுவது கண்டறியப்பட்டுள்ளது.

அதன் பின்னர் சிங்கத்தின் சளி மாதிரி பேராதனை கால்நடை மருந்துவ பீடத்துக்கு அனுப்பப்பட்டு, அது தொடர்பான மேலதிக பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அதற்கமைய, குறித்த சிங்கத்துக்குக் கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

தெஹிவளை தேசிய மிருகக்காட்சி சாலையில் 8 வருடங்களாக வசித்து–வரும் 'தோர்' என்ற இந்தச் சிங்கம், கடந்த 2012ஆம் ஆண்டு தென் கொரியாவிலிருந்து தேசிய மிருகக்காட்சி சாலைக்குக் கொண்டு வரப்பட்டது.

இந்தச் சிங்கத்துக்கு தொற்று உறுதி செய்யப்பட்டதையடுத்து, சிங்கத்துக்குப் பொறுப்பாக இருந்த மூவரை தனிமைப் படுத்தலுக்கு உட்படுத்த தெஹிவளை தேசிய மிருகக்காட்சி சாலை நிர்வாகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அதேபோல், கொரோனா வைரஸினால் பாதிக்கப்பட்ட குறித்த சிங்கம் மிருகக்காட்சி சாலையிலுள்ள வேறொரு இடத்தில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது எனவும் குறிப்பிடப்படுகின்றது.

அத்துடன், 'தோர்' வசித்து வரும் பகுதியில் மேலும் 5 சிங்கங்களும் வசித்து வருகின்றன.

இந்த விலங்குகளுக்கும் பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளதாக தெஹிவளை மிருகக்காட்சி சாலை தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## யாழ். நகரில் திருட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டன. இது தொடர்பில் யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டதையடுத்து மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவினர் மேற்கொண்ட விசாரணையின்போது 29 வயதுடைய இளைஞர் ஒருவர் இன்று கைதுசெய்யப்பட்டார். அவரிடமிருந்து திருடப்பட்ட அனைத்துப் பொருள்களும் பொலிஸாரால் மீட்கப்பட்டன.

இதேவேளை, யாழ். நகரப் பகுதியில் அமைந்துள்ள வியாபார நிலையத்தினுள் இரவு வேளை புகுந்து பெறுமதி வாய்ந்த பொருள்களைத் திருடிய ஒருவரும் இன்று மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டார். அவரிடமிருந்து திருடிய பொருட்களும் மீட்கப்பட்டன.

கடந்த நாள்களில் யாழ். மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி நிகால் பிரான்சிஸ் தலைமையிலான குழுவினரால் திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புபட்ட பலர் கைதுசெய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## குடாநாட்டில் விதி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனையடுத்து குறித்த 13 பேரும் கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். அத்துடன் மணமக்கள் குடும்பத்தினர் மேலும்14நாள்கள்தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

## நாட்டை நேசிக்கும்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாரஹன்பிட்டியவில் உள்ள அபயராம விகாரையில் இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

வயிற்றை நிரப்ப மக்கள் தங்கள் பெல்ட்களை இறுக்கச்சொன்னதலைவர் நாட்டுக்குப் பயனற்றவர். புதிய தலைவர் நாட்டில் உள்ள சொத்துக்களை விற்கும் நபராக இருக்கக்கூடாது.

அதன்படி, நாட்டை முன்னோக்கி நகர்த்த சிறந்த தலைவர் யார் என்பது குறித்து கலந்துரையாடல்கள் நடைபெற்று வருகின்றன – என்றார்.

## பஸில் ராஜபக்ஷ.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஐக்கிய மக்கள் சக்தி சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்குழு உறுப்பினரான பந்துல லால் பண்டாரிகொட கூறியவை வருமாறு:–

அதிகரிக்கப்பட்டுள்ள எரிபொருள்களின் விலை குறைக்கப்படவேண்டும் என்பதே மக்களின் கோரிக்கையாக இருக்கின்றது. எனவே, அனுதாபம், கவலை தெரிவிக்காமல் எரிபொருள்களின் விலையைக் குறைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். ராஜபக்ஷக்களால் ஒரு மேசையில் தேநீர் குடிக்கும்போதுகூட இப்பிரச்சினையைத் தீர்க்க முடியும். நிலைமை இவ்வாறிருக்கையில் பந்து அங்கும், இங்குமாறு பறிமாற்றப்படுகின்றது.

தற்போதைய அரசியல் சர்வபலம் படைத்த நபரா பஸில் என்பது குறித்து எனக்கு எதுவும் தெரியாது. எனினும், பஸில்ராஜபக்ஷநாடுதிரும்பியகையோடு புதியநாடகமொன்றுகூடஅரங்கேறலாம். அவர் வந்த பின்னர் எரிபொருள்களின் விலைகூட குறைக்கப்படலாம் – என்றார்.

அதேவேளை, அமெரிக்கா சென்றுள்ள பஸில் ராஜபக்ஷ எதிர்வரும் 23ஆம் திகதி நாடு திரும்புவார் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

## சொகுசு வாகனங்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது பற்றி மனோ எம்.பி. மேலும் விவரித்து கூறியுள்ளதாவது:–

வண. எல்லே குணவன்ஸ தேரர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது சம்பளத்தைப் பொது காரியங்களுக்காக அர்ப்பணிக்க வேண்டும் எனக் கூறுகின்றார். நல்லது. ஆனால், உண்மையில் எனக்கு வண. தேரர்கள் இதைப் போதிக்கத் தேவையில்லை.

1999ஆம் ஆண்டில் மாகாண சபைக்குத் தெரிவு செய்யப்பட்டதில் இருந்து எனக்கு கிடைக்கும் சம்பளம், கொடுப்பனவுகள் எல்லாவற்றையும் நான் பொது காரியங்களுக்காகவே தொடர்ந்தும் அர்ப்பணித்துள்ளேன். அது மட்டுமல்ல, எனது கடும் சொந்த உழைப்பினால் நான் தேடிப்பெற்ற பெறுமதியான சொத்துக்களையும், பொது காரியங்களுக்காகவே விற்று செலவழித்துக்கொண்டு இருக்கின்றேன்.

நான் ஒருபோதும் பொது சொத்தை திருடியது கிடையாது. ஏனெனில், எனக்குத் திருடத் தெரியாது. இவைதான் என் தந்தை எனக்குச் சொல்லித்தந்து விட்டுப் போன பாடங்கள். விட்டுத்தந்த மிகப் பெரிய சொத்துகள். என் தந்தையைவிட, எனக்கு வழிக்காட்ட பெரிய மதத்தலைவர் என்று எவருமில்லை.

ஆனால், இந்நாட்டின் இந்து, இஸ்லாமிய, கத்தோலிக்க மதத் தலைவர்களை விட, விசேட அந்தஸ்த்து வழங்கப்பட்டுள்ள மிகப்பல பௌத்த தேரர்களுக்கு நான் ஒன்றைச் சொல்ல விரும்புகின்றேன்.

இந்நாட்டை மாறி மாறி ஆட்சி செய்த எல்லா அரசுகளும், உங்களைப் போன்ற தேரர்களைத் தம்வசம் வைத்துக் கொள்ள, வழங்கிய பென்ஸ், ரேஞ் ரோவர், டொயோடா போன்ற சொகுசு வாகனங்கள், சொகுசு வசிப்பிடங்கள் உட்பட்ட வசதிகளையும், வரப்பிரசா தங்களையும் பொதுமக்களுக்காக அர்ப்பணியுங்கள். ஆலயங்களுக்குச் சொந்தமான சொத்துக்களையும், பொதுக் காரியங்களுக்காக வழங்கி இந்தப் பணியை ஆரம்பித்து வையுங்கள்.

கௌதம புத்தன் போதித்ததைப் போன்று, கொலை இல்லை, திருட்டு இல்லை, பணம் இல்லை, பாலியல் உறவு இல்லை, பொய் இல்லை, போதைப் பொருள் இல்லை, மதிய உணவுக்குப் பிறகு சாப்பாடு இல்லை, நடனம், இசை இல்லை, நகைகள் ஒப்பனைப்பொருள்கள் இல்லை, எழுந்த படுக்கையில் தூக்கம் இல்லை என்ற பௌத்த துறவியின் எளிய துறவு வாழ்க்கையை வாழ உங்களால் முடியாவிட்டாலும் பரவா – இல்லை.

தேரர்களாகிய நீங்கள், இன – மதவாத அரசியல் இல்லை என்று வாழ்ந்தாலே போதும். இந்நாடு உருப்படும். நாளாந்தம் கொடுமைகளின் மத்தியில் வாழ்ந்துகொண்டிருக்கும் அப்பாவி தமிழ், முஸ்லிம் மற்றும் அப்பாவி ஏழை சிங்கள மக்களும் உங்களைப் போற்றி வணங்குவார்கள் – என்று குறிப்பிட்டுள்ளார்.

**நாளைய தினம் காலைக்கதிர் காலை இதழில் தரம் – 08இற்கான கணித பாட பயிற்சி வினாத்தாள் இணைக்கப்பட்டுள்ளது.**






# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்  மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000  இணையம் - onlinekathir.com

## பயனற்ற பயணக் கட்டுப்பாடு

ஜனாதிபதித் தேர்தலில் பெருவெற்றி, பொதுத் தேர்தலில் அமோக வெற்றி என்று மிகப் பலத்துடன் அதிகாரத்துக்கு வந்தது கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிப் பீடம்.

இயல்பாகவே தன்னிடம் இருந்த இராணுவப் பின்னணியைச் சாதகமாக்கி, படைச் செல்வாக்கையும் ஆட்சிக்குள் நுழைத்தமை மூலம் அதிகாரத்தில் தமது நிலையை பல மடங்காக ஸ்திரப்படுத்திக் கொண்டார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ. அந்தப் பின்புலத்தில் கொவிட் தொற்றுப் போன்ற பேரிடரைக் கையாண்டு, கட்டுப்படுத்துவதற்கான வலிமையும், வாய்ப்பும் அவரிடம் தாராளமாகவே இருந்தன.

அவற்றை உரிய முறையில் பிரயோகித்து விடயத்தை அவர் கையாளுவார் என்று எதிர்பார்த்த நாட்டு மக்கள் – வடக்கு, தெற்கு என்ற வேறுபாடின்றி அனைவரும்– இப்போது பெரும் ஏமாற்றத்தில் மூழ்கியிருக்கின்றனர்.

கொவிட் போன்ற பெருந்தொற்றுப் பரவலைத் தணிப்பதற்கு பல கட்டுப்பாடுகளை, மட்டுப்படுத்தல்களை விதிக்க வேண்டியிருக்கும். சில எல்லைகள் வரை அடக்குமுறை அவசியமாக இருக்கும் என்றெல்லாம் பொதுவாக எதிர்பார்க்கப்பட்டது.

இவ்விடயத்தில் நிபுணர்களான மருத்துவ சுகாதாரத் துறை அதிகாரிகள், இது தொடர்பான மட்டுப்படுத்தல்கள், கட்டுப்பாடுகள் பற்றிய தீர்மானங்களை எடுப்பார்கள், அவற்றைப் படையினர், பொலிஸார் முழு அளவில் நடைமுறைப்படுத்துவார்கள் என்றுதான் ஆரம்பத்தில் கருதப்பட்டது.

ஆனால் விடயம் அப்படி நடக்கவில்லை. தீர்மானம் எடுப்பதில் படைத்துறையின் செல்வாக்குத்தான் அதிகம் இருந்தது. நடைமுறைப்படுத்தல் செவ்வனே நடக்கவும் இல்லை.

பெயருக்குத்தான் பயணக் கட்டுப்பாடு. அப்படி ஒரு கட்டுப்பாடு நடைமுறையில் இருந்ததாகவே தெரியவில்லை.

பெரும்பாலும் அனைத்து அரச சேவைகளையும் கட்டாய– அத்தியாவசிய – சேவைகளாகப் பிரகடனப்படுத்தும் வர்த்தமானி அறிவித்தல்கள் நேற்று வரை வந்து கொண்டேயிருந்தன.

அதனால் அந்தந்த அரச சேவைகளைச் சேர்ந்தோர் தினசரி கடமைக்குச் செல்லும் கட்டாயம். அதனால் பயணக் கட்டுப்பாட்டுக்கு மத்தியிலும் வீதிகளில் போக்குவரத்துத் தாராளம்.

ஆக, பொதுப் போக்குவரத்து நடக்கவில்லை. பட்டணங்கள், நகரங்களில் உள்ள வர்த்தக நிலையங்கள் இயங்கவில்லை. ஆனால் வங்கிகள் காப்புறுதி நிறுவனங்கள் எல்லாம் தாராளமாக இயங்கின. திருவிழாக்கள், பொது நிகழ்வுகள், மரண வீடுகள் ஆள்கள் கூட்டத்துடன் நடக்கவில்லை. அவ்வளவுதான்.

இந்தப் 'பயணக் கட்டுப்பாடு' என்ற குழப்பமான நடவடிக்கைத் திட்டத்தினால் கொரோனாத் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்த முடியவில்லை. கொரோனாச் சாவு எண்ணிக்கையும் குறையவே இல்லை.

பயணக் கட்டுப்பாடு, மூன்றாம் வாரத்தைத் தாண்டியும் கூட, தினசரி தொற்றாளர்கள் எண்ணிக்கை இரண்டாயிரத்து ஐந்நூறைக் குறையவில்லை. தினசரி கொவிட் தொற்றுக் காவு ஐம்பதுக்குக் குறையவில்லை.

அதுவும், பயணக் கட்டுப்பாடு என்ற பெயரளவிலான நடவடிக்கைத் திட்டம் காரணமாக தினசரி பி.சி.ஆர். பரிசோதனை எண்ணிக்கை கணிசமாகக் குறைந்திருந்தது. அதனாலே தொற்றாளர் எண்ணிக்கை உரிய அளவைக் காட்டாமல் குறைந்து காட்டி வந்தது. அந்தக் குறைவிருந்தும் அந்த எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்படவில்லை.

அதனால் உண்மையான தொற்றாளர் எண்ணிக்கை மிக அதிகமாக இருக்கும், மேலும் பல்லாயிரம் பேர் தொற்றாளர்கள் என அடையாளம் காணப்படாமல் சமூகத்துக்குள் விடப்பட்டு, தொற்றுப் பரப்புபவர்களாக நடமாடுகின்றனர் என சம்பந்தப்பட்ட நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்.

இந்தச் சீத்துவத்தில்தான் ஏற்கனவே பயனற்ற நடைமுறையாகிப் போன பயணக் கட்டுப்பாட்டை திங்கள், செவ்வாய், புதன் கிழமைகளில் தளர்த்துவது பற்றிய முடிவை அரசு அறிவித்திருக்கின்றது.

மீண்டும் கடைகள், வர்த்தக நிலையங்கள் திறக்கப்படவும், மக்கள் ஒரேயடியாக ஒன்று திரளவும் வாய்ப்பான சூழலை ஏற்படுத்தி புதிய, புதிய கொரோனாக் கொத்தணிகள் தாராளமாக உருவாகுவதற்கு அரசு இதன் மூலம் வழி ஏற்படுத்திக் கொடுக்கின்றது.

நிலைமையைப் பார்க்கும்போது போகின்ற போக்கில் விளிம்பு நிலை எல்லையில் நிற்கும் வைத்திய சேவைகள், கொரோனா நெருக்கடிக்கு முகம் கொடுக்க முடியாமல் முழுவதுமாகப் படுத்துவிடும் ஆபத்து நேரலாம்.

தொற்றுக் கட்டுப்படுத்தும் நிலைமை அரசின் கைகளை மீறிப் போய், விவகாரம் சமூகத் தொற்றாகி, எல்லை கடந்து விட்டது என்பதால்தான் இப்படியான தளர்வு நடவடிக்கைக்கு அரசு இணங்கியதோ எனக் கேள்வி எழுகின்றது.

தலைக்கு மேல்போன பின்னர் சாண் போனால் என்ன முழம் போனால் என்ன என்ற மாதிரித்தான் அரசின் முடிவு அமைந்திருப்பதாகத் தோன்றுகின்றது.

## சுற்றுச் சூழலை அனுபவிப்பதற்கு குழந்தைகளுக்கு இடமளிக்குக!

### பிரதமர் மஹிந்த வலியுறுத்து



முன்பள்ளியை போட்டித்தன்மை மிகுந்த கல்வி வழங்கும் மற்றொரு பாடசாலையாக மாற்றாமல் குழந்தைகளுக்கு சுற்றுச்சூழலை அனுபவிக்க இடமளியுங்கள் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று (வியாழக்கிழமை) அலரி மாளிகையில் வைத்து தெரிவித்தார்.

முன்பள்ளி ஆசிரியர்களுக்கு 2 ஆயிரத்து 500 ரூபா கொடுப்பனவை பெற்றுக் கொடுக்கும் 'குரு அபிமானி' தேசிய நிகழ்வில் கலந்து கொண்டு பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் மற்றும் மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, அறநெறிப் பாடசாலைகள், கல்விச் சேவைகள் மற்றும் பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் பியல் நிசாந்த ஆகியோர் இதன்போது ஆரம்பகால குழந்தை பருவக்கல்வி தொடர்பாகத் தேசிய கொள்கையை பிரதமருக்கு வழங்கினர்.

குரு அபிமானி தேசிய வேலைத் திட்டத்தை மையமாகக் கொண்டு முன்பள்ளி ஆசிரியர்களுக்கு கௌரவ பிரதமர் மற்றும் பிரதமரின் பாரியார் திருமதி ஷிரந்தி ராஜபக்ஷவால் இதன்போது மேற்படி கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன.

'சுபீட்சத்தின் நோக்கு' திட்டத்திற்கமைய அனைத்து கிராம சேவகர் பிரிவுகளிலும் நிறுவப்பட்டுள்ள சுபீட்சத்தின் முன்பள்ளி கட்டுமானத்துக்காக 25 லட்சம் ரூபா மற்றும் 1,500 முன்பள்ளிகளின் உட்கட்டமைப்பு மேம்பாட்டிற்காக 6 லட்சம் ரூபா நிதி வழங்கலும் பிரதமரின் தலைமையில் இடம்பெற்றது.

முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, அறநெறிப் பாடசாலைகள், கல்விச் சேவைகள் மற்றும் பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சின் கீழ் இந்த வேலைத்திட்டம் செயற்படுத்தப்பட்டுள்ளது.

இதன்போது பிரதமர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

பிள்ளைகளின் எதிர்காலத்திற்கு அடித்தளமாக விளங்கும் முன்பள்ளி ஆசிரியர்களை பாராட்டும் நிகழ்வில் கலந்துகொள்ளக் கிடைத்தமை தொடர்பாகப் பெரும் மகிழ்ச்சியடைகிறேன். பெற்றோருக்கு அடுத்தபடியாக குழந்தைகளுக்கான அடித்தளம் முன்பள்ளிகளிலேயே போடப்படுகிறது.

டொக்டர் மரியா மாண்டிசோரி அவர்களே இந்த முன்பள்ளிக் கல்வியை நம் நாட்டிற்கு அறிமுகப்படுத்தினார். முன்பள்ளி தொடர்பில் முன்னர் கூடிய கவனம் செலுத்தப்படாவிடினும், ஐந்து தசாப்த காலத்தில் அது தொடர்பிலான கவனம் அதிகரித்துள்ளது.

முன்பள்ளி இன்று குழந்தை மேம்பாட்டு மையம் என்றும் அழைக்கப்படுகிறது. அப்படி கூறுவதற்கு ஒரு காரணம் உள்ளது. அதாவது, முன்பள்ளியில்தான் குழந்தைகள் முறையான பாடசாலைக் கல்விக்கு வழி நடத்தப்படுகின்றனர்.

எனவே, இந்த உலகில் ஒரு குழந்தை பிறக்கும்போது, அந்தக் குழந்தைக்கு உலகைப் பார்ப்பதற்கான முதல் அடித்தளம் முன்பள்ளியில் போடப்படுகின்றது என்பதை புதிதாக கூறவேண்டியதில்லை.

முன்பள்ளிகள், பராமரிப்பு மையங்கள் என்ற இந்த பெயர்களைக் கொண்ட நிறுவனங்களை கல்வித்துறையில் மிக முக்கியமான பகுதிகளாக அடையாளம் கண்டுள்ளோம்.

அதுமட்டுமன்றி, சர்வதேச தரங்களுக்கு ஏற்ப முன்பள்ளிகளை இயக்குவதற்கான வழிமுறையையும் நாட்டை கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு கொள்கையில் சேர்த்துள்ளோம்.

நாங்கள் ஆட்சிக்கு வந்தவுடனேயே அந்த நோக்கத்திற்காக முன் பள்ளிகளுக்கான இராஜாங்க அமைச்சர் பதவியை ஏற்படுத்தினோம். இராஜாங்க அமைச்சர் பியல் நிசாந்த, இந்த நடவடிக்கைகளை முறையாக மேற்கொள்வார் என்பதை நாங்கள் அறிவோம்.–என்றார்.

## மீன்பிடி அமைச்சரின் கூட்டத்துக்கு ஊடகவியலாளருக்கு அனுமதி மறுப்பு!

### மருதங்கேணியில் சம்பவம்

வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தில் இடம்பெற்ற மீன்பிடி அமைச்சருக்கும் வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க பிரதிநிதிகளுக்கும் இடையில் இடம்பெற்ற கூட்டத்துக்கு செய்தி சேகரிக்கச்சென்ற ஊடகவியலாளர்களுக்கு பொலிஸாரால் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக அமைச்சரின் பிரதிநிதி ஒருவரிடம் கேட்டபோது தாம் ஊடகவியலாளர்கள் செல்ல அனுமதியை மறுக்கவில்லை என்றும் மருதங்கேணி பொலிஸாரே அனுமதிக்கவில்லை எனவும் தெரிவித்தார்.

இதேவேளை என்ன விடயங்கள் கூட்டத்தில் பேசப்பட்டன என கட்டைக்காடு கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க தலைவரிடம் கேட்ட போது – தாம் பத்தாண்டுக்கு மேலாக உழவு இயந்திரம் பயன்படுத்தி இருபதுக்கு மேற்பட்ட கம்பான் என்று சொல்லப்படுகின்ற நயிலோன் கயிற்றை பயன்படுத்தி கரவலை தொழிலில் ஈடுபட்டுவருகின்றனர் எனவும் தற்போது அது கடற்றொழில் அமைச்சால் தடைசெய்யப்பட்டுள்ளதாகவும் அதற்கான அனுமதியைத் தர வேண்டும் என்று கோரியதாகவும், கடலட்டை தொழிலில் வடமராட்சி கிழக்கு பிரதேசத்திற்குள் மேற்கொள்ள தடை விதிக்க வேண்டும் என்று கோரியதாகவும், கடலுக்குள் இலை குழை பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடுவதைத் தவிர்க்க வேண்டும் என்று கோரியதாகவும் அதனடிப்படையில் ஒரு வாரத்துக்குள் உழவியந்திரம் பயன்படுத்தி கரவலை தொழிலில் ஈடுபடவும், கடலட்டை பிடிப்பதற்கு பிரதேச மீனவர்களுக்கு மட்டும் அனுமதிப்பதென்றும், கடலில் இலை குழை பயன்படுத்தி மீன் பிடிக்க முற்றாகத் தடை விதிக்கத் தீர்மானித்துள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க பிரதிநிதிகள் கூட்டம் நிறைவடைந்த பின்னர் கரவலை சம்மாட்டி மாருக்கும் அமைச்சருக்கும் இடையில் ஒன்று கூடல் இடம்பெற்றிருந்தது அதில் என்ன விடயங்கள் பேசப்பட்டன என அறிய முடியவில்லை.

இதேவேளை, நேற்று (வியாழக்கிழமை) இடம்பெற்ற ஒன்று கூடல்களுக்கு சென்றவர்களுக்கு கைகழுவ வசதி செய்யப்படவில்லை என்பதுடன் சமூக இடைவெளியும் பேணப்படவில்லை. திருமணம் உட்பட்ட நிகழ்வுகளில் குறிப்பிட்ட ஒருசிலரே அனுமதிக்கப்பட்டு அதிகமாக யாராவது சென்றால் அவர்களை தனிமைப்படுத்தும் பொலிஸ் மற்றும் சுகாதார அதிகாரிகள் நேற்று அதிகளவிலான ஆள்கள் பங்கு கொண்ட இந்தக்கூட்டத்தைக் கண்டுகொள்ளாதது ஏன் என பலராலும் கேள்வி எழுப்பப்படுகிறது.



# ஹொங்கொங்கின் பத்திரிகை அலுவலகத்தில் பொலிஸ் அதிரடி

## தலைமை செய்தி ஆசிரியர் கைது

ஹொங்கொங்கில் நெக்ஸ்ட் டிஜிட்டல் என்ற நிறுவனம் சார்பில் ஆப்பிள் டெய்லி என்கிற தினசரி செய்தித்தாள் பிரசுரமாகி வருகிறது. இந்த செய்தித்தாளில் சீனாவின் ஆளும் கம்யூனிஸ்டு கட்சிக்கு எதிராகவும், அதன் தலைவர்களின் சர்வாதிகாரப் போக்கை விமர்சித்தும், ஹாங்காங்கில் ஜனநாயகம் நிலைநாட்டப்பட வேண்டும் என்றும் கட்டுரைகளும், செய்திகளும் வெளியிடப்பட்டு வருகின்றன.

ஏற்கனவே இந்த பத்திரிகையின் உரிமையாளர் ஜிம்மி லாய், சீனாவுக்கு எதிராக போராடிய வழக்கில் தேசிய பாதுகாப்பு சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் ஆப்பிள் டெய்லி பத்திரிகை தேசிய பாதுகாப்பு சட்டத்தை மீறியதாக கூறி நேற்று 500இற்கும் மேற்பட்ட பொலிஸார் அந்த பத்திரிகை அலுவலகத்துக்குள் அதிரடியாக நுழைந்து சோதனை நடத்தினர்.

அதனைத் தொடர்ந்து ஆப்பிள் டெய்லி பத்திரிகையின் தலைமை செய்தி ஆசிரியர் மற்றும் மூத்த நிர்வாகிகள் 4 பேரை பொலிஸார் அதிரடியாக கைது செய்தனர். மேலும் அந்த பத்திரிகை நிறுவனத்துக்குச் சொந்தமான 18 மில்லியன் ஹொங்கொங் டொலர் (இலங்கை மதிப்பில் சுமார் ரூ.50 கோடி) சொத்துக்களையும் பொலிஸார் முடக்கினர்.

முன்னதாக கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் இதே போல் ஆப்பிள் டெய்லி பத்திரிகை அலுவலகத்துக்குள் அதிரடியாக நுழைந்த பொலிஸார் உரிமையாளர் ஜிம்மி லாய் மற்றும் அவரது மகன்கள் 2 பேரை கைது செய்தமை குறிப்பிடத்தக்கது.

# இங்கிலாந்தில் அதிகரிக்கும் கொரோனா தொற்று பாதிப்பு 46 லட்சத்தைக் கடந்தது

உலக அளவில் கொரோனாவால் அதிகம் பாதிக்கப்பட்ட நாடுகளின் வரிசையில் முதல் இடத்தில் அமெரிக்காவும், இரண்டாவது இடத்தில் இந்தியாவும் உள்ளன. இதைத் தொடர்ந்து 3 ஆவது இடத்தில் தென் அமெரிக்க நாடான பிரேசிஷில் உள்ளது.

கொரோனா வைரஸால் பாதிப்பு அடைந்துள்ள நாடுகளில் பட்டியலில் இங்கிலாந்து 7ஆவது இடத்தில் நீடிக்கிறது.

இந்நிலையில், இங்கிலாந்து சுகாதாரத் துறை வெளியிட்டுள்ள அறிக்கையின்படி, அங்கு கடந்த 24 மணி நேரத்தில் புதிதாக 11 ஆயிரம் பேருக்கு கொரோனாத் தொற்று உறுதியானதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



இதனால் அங்கு கொரோனாவால் பாதிப்பு அடைந்தோர் எண்ணிக்கை 46,00,623 ஆக அதிகரித்துள்ளது. அங்கு கடந்த 24 மணி நேரத்தில் 19 பேர் கொரோனா பாதிப்பால் உயிரிழந்துள்ள நிலையில், அங்கு இதுவரை கொரோனாவால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 1 லட்சத்து 28 ஆயிரத்தை நெருங்குகிறது என தெரிவித்துள்ளது.

# உலகின் மூன்றாவது பெரிய வைரம் மொட்ஸ்வானாவில் கண்டுபிடிப்பு

உலகிலேயே மிகப்பெரிய வைரம் 1905 ஆம் ஆண்டு தென் ஆபிரிக்க நாட்டில் கண்டுபிடிக்கப்பட்டது. அந்த வைரம் 3,106 கரட் அளவு கொண்டதாகும்.



அதற்கு அடுத்தபடியாக, இரண்டாவது மிகப்பெரிய வைரம் மொட்ஸ்வானா நாட்டில் 2017ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டது. அந்த வைரம் 1,109 கரட் அளவு ஆகும்.

இந்நிலையில், 1,098 கரட் அளவுடன் உலகின் 3 ஆவது பெரிய வைரம் மொட்ஸ்வானா நாட்டில் கண்டுபிடிக்கப்பட்டு உள்ளது. 73 மில்லி மீற்றர் நீளம், 52 மில்லி மீட்டர் அகலம், 27 மில்லி மீற்றர் தடிப்பும் கொண்டுள்ள இந்த வைரக்கல் கடந்த 1ஆம் திகதி அரசு துணையுடன் இயங்கும் டப்ஸ்வானா என்ற நிறுவனத்தால் கண்டு பிடிக்கப்பட்டது. கடந்த சில நாள்களுக்கு முன் கண்டு பிடிக்கப்பட்ட வைரத்தை மொட்ஸ்வானா அதிபர் மோக்விட்சிகையில் வைத்திருக்கும் படம் வெளியாகியுள்ளது. பலகோடி ரூபாய் மதிப்புள்ள இந்த வைரக்கல்லை கொரோனா வைரஸ் காலம் முடிவடைந்த பின்னர் ஏலம் விட மொட்ஸ்வானா அரசு திட்டமிட்டுள்ளது. வைரத்தை ஏலம் விடுவதன் மூலம் கிடைக் கும் பணத்தை கொரோனாவுக்கு பிந்தைய நாட்டின் பொருளாதார மேம்பாட்டிற்கு பயன்படுத்த திட்ட மிட்டுள்ளதாக அரசுத்தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கடும் உணவு பஞ்சம்

# 2 நாளைக்கு ஒரு தடவை மட்டும் சாப்பிடும் வட கொரிய மக்கள்



இரும்புத்திரை நாடாக உள்ள வடகொரியாவில் என்ன நடக்கிறது என்பதே வெளி உலகத்துக்கு தெரியாது.

ஆனால் தற்போது பல லட்சம் மக்கள் பட்டினி கிடக்கும் தகவல் வெளியாகி உள்ளது. கடந்த ஆண்டு கொரோனா பரவியதால் வடகொரியாவுக்கு நோய்த்தொற்று வந்துவிடக் கூடாது என்பதற்காக அதிபர் கிங்ஜாங்உன் பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்தார்.

வடகொரியாவுக்கு சீனாவில் இருந்துதான் பல்வேறு உதவிப்பொருள்கள் கொண்டு செல்லப்பட்டன. அவற்றுக்கும் தடை விதித்தார்.

இதன் காரணமாக பொருள்கள் வருவது தடைப்பட்டது. குறிப்பாக விவசாயத்துக்கு தேவையான உரம், பூச்சிக்கொல்லி மருந்து, விவசாய கருவிகள் போன்றவையும் வரவில்லை. இதனால் விவசாயம் கடுமையாக பாதிக்கப்பட்டது.

மேலும் புயல் காரணமாகவும் விவசாய உற்பத்தி பாதிக்கப்பட்டது. இதனால் போதிய உணவுப் பொருள்கள் கிடைக்கவில்லை.

வடகொரியா மக்கள் அரிசி, மக்காசோளம் போன்றவற்றை அதிகமாக சாப்பிடுபவர்கள். அதில் அரிசிக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டது. மற்ற உணவு பொருள்களும் போதுமானதாக இல்லை.

இதனால் 15 லட்சம் தொன் உணவு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. மேலும் விலைவாசியும் கடுமையாக உயர்ந்து விட்டது. 1 கிலோ வாழைப்பழம் இலங்கை மதிப்பில் ரூ.9,000 இற்கு விற்கிறது. இவற்றை வாங்கி சாப்பிட பணம் இல்லாமல் மக்கள் பட்டினி கிடக்கிறார்கள்.

பல லட்சம் பேர் பட்டினி கிடக்கின்றனர் எனவும் அவர்களில் பலர் 2 நாள்களுக்கு ஒரு தடவை சாப்பிடுகின்றனர் எனவும் ராய்ட்டர் செய்தி நிறுவனம் கூறியுள்ளது.

நாட்டில் உணவு பஞ்சம் ஏற்பட்டுள்ளதை அதிபர் கிங் ஜாங் உன்னும் ஒப்புக் கொண்டுள்ளார். 1990 ஆம் ஆண்டு அங்கு ஏற்பட்ட கடுமையான பஞ்சத்தில் 30 லட்சம் பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

## விண்ணில் தனக்கென பிரத்யேக ஆய்வு மையத்தை அமைக்கும் பணியில்

# 3 விண்வெளி வீரர்களை விண்ணுக்கு அனுப்பிய சீனா

விண்ணில் தனக்கென பிரத்யேக ஆய்வு மையத்தை அமைத்துவரும் சீனா, மூன்று விண்வெளி வீரர்களை விண்ணுக்கு அனுப்பியுள்ளது.

கோபி பாலைவனத்திலுள்ள ஜியூகுவான் (Jiuquan) செயற்கைகோள் ஏவுதளத்திலிருந்து மார்க் 2 எப் ரொக்கெட் மூலம் ஷென்சூ 12 விண்கலம் ஏவப்பட்டது. அதில், நீ ஹைஹெங், லியு போமிங், மற்றும் டாங் ஹோங்போ ஆகிய மூன்று விண்வெளி வீரர்கள் அனுப்பப்பட்டனர்.

இவர்கள் மூன்று பேரும் பூமியிலிருந்து 380 கிலோமீற்றர் தொலைவில் உள்ள தியான்ஹே என்ற அமைப்பில் 3 மாதங்களுக்கு தங்கி விண்வெளி மையம் அமைக்கும் பணியில் ஈடுபடவுள்ளனர்.



# இந்தியாவில் 3 ஆவது அலை குழந்தைகளைப் பாதிக்காது



இந்தியாவில் கொரோனாவின் இரண்டாவது அலை தணிந்து வரும் நிலையில், மூன்றாவது அலையும் விரைவில் தாக்கலாம் எனவும் இந்த அலை குழந்தைகளை அதிகம் பாதிக்கும் எனவும் எச்சரிக்கைத் தகவல்கள் பகிரப்பட்டுவருகின்றன.

இந்த நிலையில் உலக சுகாதார அமையத்தின் வழிகாட்டலில் எய்ம்ஸ் மருத்துவமனை இயக்குநர் மருத்துவர் ரந்தீப் குலேரியா மற்றும் மருத்துவர்கள் அடங்கிய குழுவினர் குழந்தைகளிடம் தெளிய வியல் சோதனை எனப்படும் செரோ ஆய்வை நடத்தியுள்ளனர். மாவட்ட அளவில் நடத்தப்படும் இந்த ஆய்வு 5 மாநிலங்களில் நடந்துள்ளது. 2 முதல் 17 வயது வரையிலான 700 குழந்தைகள் மற்றும் 18 வயதுக்கு மேற்பட்ட பெரியவர்கள் 3,809 பேர் என மொத்தம் 4,509 பேர் இந்த ஆய்வில் பங்கேற்றனர்.

இந்த ஆய்வில் ஆச்சரியமளிக்கும் சில முடிவுகள் வெளிவந்துள்ளன. அதாவது குழந்தைகளின் செரோ பரவல் 55.7 சதவீதமாகவும், பெரியவர்களின் விகிதம் 63.5 சதவீதமாகவும் இருந்துள்ளது. அந்தவகையில் புள்ளி விவர ரீதியாக குறிப்பிடத்தக்க வேறுபாடு இல்லை எனக் கண்டறியப்பட்டுள்ளது. இவ்வாறு குழந்தைகளின் செரோ விகிதம் அதிகமாக இருப்பதாலும், பெரியவர்களுடன் ஒப்பிடக்கூடிய அளவில் இருப்பதாலும் கொரோனாவின் மூன்றாவது அலை குழந்தைகளை அளவுக்கு அதிகமாகப் பாதிக்காது என ஆய்வில் பங்கேற்ற நிபுணர்கள் கூறியுள்ளனர்.

# கொரோனாவால் தாய் உயிரிழப்பு டுபாயில் தவித்த 11 மாத குழந்தை

## விமானம் மூலம் திருச்சிக்கு அழைத்துவரப்பட்டது

இந்தியாவின் தமிழகம், கள்ளக்குறிச்சியை சேர்ந்த வேலவன் - பாரதி தம்பதிகளின் குடும்ப நிலை காரணமாக பாரதி டுபாயில் பணியாற்றி வந்தார். அவரோடு பிறந்து 11 மாதங்களான மகன் தேவேஷும் தங்கியிருந்தான்.

அங்கு வீட்டு வேலை செய்து வந்த பாரதி, கடந்த மே மாதம் கொரோனாவால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தார். அவருடைய உடல் துபாயில் அடக்கம் செய்யப்பட்டது. இதனால், அவருடைய கைக்குழந்தை தேவேஷ் தாயின்றி தவித்தது. பாரதியின் தோழிகள் குழந்தையைப் பராமரித்து வந்தனர்.

இதுபற்றி அறிந்த டுபாயில் வசிக்கும் டுபாய் தி.மு.க. அமைப்பாளர் எஸ்.எஸ்.முகமது மீரான், தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை தொடர்பு கொண்டு நடந்த விவரங்களை தெரிவித்தார். இதைத்தொடர்ந்து அந்த குழந்தையை தமிழகத்துக்கு அழைத்துவருவதற்கான ஏற்பாடுகளை முதலமைச்சர் மேற்கொண்டார். அதையடுத்து, நேற்று டுபாயில் இருந்து திருச்சிக்கு வந்த திருவாரூரைச் சேர்ந்த சதீஷ்குமாருடன் குழந்தை தேவேஷ் விமானத்தில் அனுப்பி வைக்கப்பட்டது. அந்த விமானம் நேற்று திருச்சி வந்தடைந்ததும்,



விமான நிலையத்தில் காத்திருந்த குழந்தையின் தந்தை வேலனிடம் குழந்தை ஒப்படைக்கப்பட்டது.

இந்தத் தம்பதியின் 3 மகன்களில் மூத்த மகன் இறந்துவிட்டான். 2 ஆவது மகனுக்கு 7 வயது ஆகிறது. 3 ஆவது மகன் தேவேஷ் பிறந்து 9 மாதங்களில் கைக்குழந்தையாக டுபாய்க்கு கொண்டு சென்றிருந்தார் பாரதி.

# கொரோனாத் தடுப்பூசி பிரச்சினையை அரசியலாக்குவது துரதிஷ்டவசமானது

## மத்திய அமைச்சர் ஹர்ஷ்வர்தன் டுவிட்டரில் பதிவு

கொரோனாத் தடுப்பூசி போன்ற முக்கியமான பிரச்சினையை அரசியலாக்குவது துரதிர்ஷ்டவசமானது என இந்திய மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் ஹர்ஷ்வர்தன் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் பரவலாக வழங்கப்பட்டுவரும் கொவிஷீல்ட் தடுப்பூசியின் முதல் டோஸுக்கும் இரண் டாம் டோஸுக்குமான இடைவெளியை 6 முதல் 8 வாரங்களில் இருந்து 12 வாரம் முதல் 16 வாரங்கள் வரை நீடிக்கலாம் என நிபுணர் குழு பரிந்துரைத்தது. இரண்டாவது டோஸ் 12 முதல் 16 வாரங்களுக்குள் வழங்கப்பட்டால் கூடுதல் பலன் கிடைப்பதாக தெரிவிக் கப்பட்டது.

அதன்படி, கொவிஷீல்ட் தடுப்பூசிக்கான நெறிமுறை மாற்றப்பட்டுள்ளது. எனினும், கொவிஷீல்ட் தடுப்பூசியின் இரு டோஸ்களுக்குமமான இடை வெளியை குறைப்பது தான் பயனுள்ளதாக இருக்கும் என ஆய்வு முடிவுகள் கூறுகின்றன என அண்மையில் செய்திகள் வெளியாயின.

இதனால் கொவிஷீல்டட் முதல் டோஸ் தடுப்பூசியை செலுத்திக் கொண் டவர்களுக்கு இரண்டாவது டோஸ் செலுத்துவதில் குழப்பம் நிலவியது. இந்த நிலையில், கொவிஷீல்ட் தடுப்பூசிக் கான இடைவெளி குறித்து பொதுமக்கள் பீதியடைய வேண்டாம் என இந்திய மத்திய அரசு தொடர்ந்து கூறி வருகிறது.

கொவிஷீல்ட் தடுப்பூசியின் இரண்டு டோஸ்களுக்குமான இடைவெளியை அதிகரிப்பது குறித்த முடிவு, அறிவியல்பூர்வமான ஆதாரத்தின் அடிப்படையில், வெளிப்படையான முறையில் எடுக்கப்பட்டது என்று தேசிய நோய்த் தடுப்பு தொழில்நுட்ப ஆலோசனைக் குழு (என்.டி.ஏ.ஜி.ஐ.) தலைவர் என்.கே.அரோரா விளக்கம் அளித்திருந்தார்.

இது குறித்த அறிக்கை தொடர்பாக இந்திய மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் ஹர்ஷ்வர்தன் டுவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

அதில், கொவிஷீல்ட் தடுப்பூசி டோஸ்களுக்கான இடைவெளியை அதிகரிக்கும் முடி வானது வெளிப்படையாகவும் அறிவியல் பூர்வ தரவுகளின் அடிப்படையிலும் எடுக்கப்பட்டதாக கூறியுள்ளார். தரவை மதிப்பீடு செய்வதற்கு இந்தியா வலுவான பொறிமுறையைக் கொண்டுள்ளது என்றும், இது போன்ற முக்கியமான பிரச்சினையை அரசியலாக்குவது துரதிர்ஷ்டவசமானது என்றும் ஹர்ஷ்வர்தன் குறிப்பிட்டுள்ளார்.



# இந்தியப் பிரதமரைச் சந்தித்தார் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின்

## கோரிக்கைகள் அடங்கிய மனுவையும் கையளித்தார்

இந்தியப் பிரதமர் நரேந்திரமோடியை தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று டெல்லியில் சந்தித்துப் பேசினார். அப்போது தமிழகத்தின் வளர்ச்சித்திட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுவை இந்தியப் பிரதமரிடம் மு.க.ஸ்டாலின் வழங்கினார்.

அந்த மனுவில், தமிழகத்தில் உள்ள மத்திய அரசு அலுவலகங்களுக்கான வேலைவாய்ப்பில் தமிழர்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்று பிரதமர் மோடியிடம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினால் வலியுறுத்தப்பட்டிருந்ததோடு, நேரிலும் அந்த விடயம் குறித்து அவர் உரையாடியுள்ளார்.

நீர்வள விவகாரங்கள், மீன்வளம், மின்சாரப் பிரச்சினைகள், நிதி விவகாரங்கள், நுழைவுத்தேர்வுகள், வேளாண்மை, தொழிற்சாலைக் கோரிக்கை, பள்ளிக்கல்வி, தமிழ் வளர்ச்சி, பிற்படுத்தப்பட்டோர் நலன், நெடுஞ்சாலை, துறைமுகம், நீதித்துறை, விமான நிலையம் சார்ந்த விடயங்கள் அந்த மனுவில் முக்கியத்துவம் பெற்றிருந்தன.

கர்நாடகாவில் மேகதாது அணை கட்டும் திட்டத்திற்கு அனுமதி வழங்கக் கூடாது, கச்சதீவை மீட்பதோடு, அங்கு தமிழக மீனவர்கள் சென்று மீன்பிடிக்கும் உரிமையை மீட்டெடுக்க வேண்டும், நீட் என்ற மருத்துவக் கல்விக்கான தகுதித் தேர்வையும் மற்ற கல்வி சேர்க்கைகளுக்கும் வைக்கப்படவுள்ள நுழைவுத் தேர்வுகளையும் கைவிட வேண்டும், வேளாண்மை தொடர்பான 3 சட்டங்களையும் திரும்பப் பெற வேண்டும், தேசிய கல்விக்கொள்கையை திரும்பப்பெற வேண்டும் போன்ற கோரிக்கைகள் அந்த மனுவில் குறிப்பிடத்தக்கவையாக இடம்பெற்றிருந்தன.

# காவிநிற உடைத் திருவள்ளுவர் பட விவகாரம் பல்கலைக்கழக நிர்வாகத்தினால் விளக்கம்






கொரோனாப்பரவலைத் தடுக்கும் வகையில் கடந்த ஆண்டு நாடு முழுவதும் ஊரடங்கு அறிவிக்கப்பட்டது. அன்று முதல் கோவையிலும் அரசு மற்றும் தனியார் பள்ளிகளும் கல்லூரிகளும் மூடப்பட்டன. இதனால், விடுதியில் தங்கிப் படிக்கும் மாணவர்களும் சொந்த ஊர்களுக்குச் சென்றுள்ளனர்.

நாடு முழுவதற்குமான முழு ஊரடங்கு தளர்த்தப்பட்ட பின்னர் கோவையில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் ஒரு சில மாணவ, மாணவிகள் மட்டும் விடுதிகளில் தங்கி ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். இந்த நிலையில் கோவை வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள நூலகத்தில் புத்தர், விவேகானந்தர், பாரதியார் ஆகியோரின் படங்களும், கற்கைகள் குறித்த அவர்களின் கருத்துகளும் சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டிருந்தன.

அவற்றில் காவிநிற உடை அணிந்த திருவள்ளுவர் படம் வைக்கப்பட்டு இருந்த படம் சமூக வலைத்தளங்களில் கருத் தாடலுக்கு உட்பட்டது. இதையடுத்து வேளாண்மைப் பல்கலைக்கழகநூலகத்தில் காவிநிற உடையில் இருந்த திருவள்ளுவர் புகைப் படத்தை பல்கலைக்கழக அதிகாரிகள் உடனடியாக அகற்றினர். அதற்குப் பதிலாக வெள்ளை நிற ஆடை அணிந்த திருவள்ளுவர் படம் வைக்கப்பட்டது.

இது குறித்து வேளாண்மைப் பல்கலைக்கழக நிர்வாகத் தரப்பினால், 'இந்தப் படம் கடந்த 2015 ஆம் ஆண்டு முதல் இந்த நூலகத்தில் உள்ளது. தற்போதைய நிர்வாகத்தினால் அது வைக்கப்படவில்லை. அந்தத் திருவள்ளுவர் படம் தொடர்பாக விவா தங்கள் எழுந்ததால் புதிதாக வெள்ளை நிற உடையில் திருவள்ளுவர் படம் வைக்கப்பட்டுள்ளது' என்று விளக்கமளிக்கப்பட்டுள்ளது.




# களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தர்கள் ஆர்ப்பாட்டம்

களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலையில் கடமை புரியும் தாதிய உத்தியோகத்தர்கள் நேற்று வியாழக் கிழமை நண்பகல் பதாகைகளை ஏந்தியவாறு வைத்தி யசாலைக்கு முன்பாக அரச தாதிய உத்தியோகத்தர் சங்கத்தின் களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலை கிளையின் தலைவர் தி.வித்தியாபதி தலைமை யில் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மேற்படி தாதிய உத்தியோகத்தர்கள் வைத்தி யசாலைக்கு வரும் நோயாளர்களுக்கு மேற் கொள்ளப்படும் அன்டிஜன் மற்றும் பி.சி.ஆர். பரிசோதனைகளில் ஈடுபடாமல் அதிலிருந்து விலகி தமது ஏனைய கடமைகளை மேற் கொண்டு வரும் இந்நிலையில் இதன்போது இவ்வாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

ஏனைய வைத்திசாலைகளுக்கு வழங்கப் படும் விசேட விடுமுறைகளை எமது தாதியர்களுக்கும் வழங்குங்கள், நோயாளர்களுக்குச் செய்யப்படும் சேவைகளுக்கு இடையூறு செய்யாமல் தொடர அனுமதி செய்யுங்கள். தொழிற் சங்கங்களை கேலி செய்யாதே, தாதியர்களை மன உழைச்சலுக்கு உள்ளாக்காதே, தாதி யரை அடக்குமுறைக்கு உள்ளாக்காதே, ஊழியர்களி டையே முரண்பாட்டை ஏற்படுத்தாதே, உள்ளிட்ட பல வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு தாதியர்கள் இதன்போது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நாங்கள் 24 மணி நேரமும் கண்விழித்து கடமை யாற்றுகின்றோம். எமது வைத்தியசாலையின் அத்தி சட்சகரினால் எமக்கு ஏற்படும் பிரச்சினைகளை தீர்ப்ப தற்கு பலமுறை முயன்றபோது அவர் எம்மை அவ மரியாதையாக நடாத்தினார்.

இதனால் பாதிக்கப்படுவது நோயாளிகள்தான். எனவே இவ்விடயங்கள் தொடர்பில் எமது மேலதி காரிகளுக்கு நாம் அறிவித்துள்ளோம். என அவர் இதன்போது தெரிவித்தார்.

# 29 நபர்களுக்கெதிராக வழக்குத் தாக்கல்

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் பயணத் தடையை மீறி சட்ட விரோதமாக வீதியில் நடமாடிய குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட 29 நபர்களுக்கெதிராக வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாக, அக்கரைப்பற்று பொலிஸ் நிலைய சமூக பொலிஸ் பிரிவு பொறுப்பதிகாரி, இன்ஸ்பெக்டர் எஸ்.எம்.சதாத் நேற்று தெரிவித்தார்.

அக்கரைப்பற்று பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியும், இன்ஸ்பெக்டருமான டபிள்யு.எம்.எஸ்.பி. விஜயதுங்கவின் தலைமையில் நேற்று முன்தினம் அக்கரைப்பற்று நகர் மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் பயணத்தடையை மீறி வீதிகளில் நடமாடியவர்கள் மற்றும் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்ட வர்த்தகர்கள் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்தார்.

மேலும் பயணத்தடையை மீறி சட்டவிரோதமாக வீதி களில் உலாவுபவர்கள், அனுமதிப் பத்திரமின்றி வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் மற்றும் வர்த்தக நிலையங்களை திறந்து வியாபாரத்தில் ஈடுபடுபவர்கள் ஆகியோர் கைது செய்யப்பட்டு வழக்குத் தாக்கல் செய்யப்படும் எனவும் தெரிவித்தார்.

அத்தியாவசிய தேவைகளுக்காக வெளியில் செல் பவர்கள் முகக்கவசம் அணியாமலும், சுகாதார நடை முறைகளை கடைப்பிடிக்காமலும் செல்கின்றனர் என அறியக் கிடைத்துள்ளது. இவர்களும் கைது செய்யப்படு வார்கள் எனத் தெரிவித்தார்.

அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, ஒலுவில், பாலமுனை, ஆலையடிவேம்பு ஆகிய பிரதேசங்களில் தொடர்ச்சியாக விசேட ரோந்து நடவடிக்கைகளில் பொலி ஸார் ஈடுபட்டு, சட்டவிரோதமாக வீதிகளில் உலாவுவோர் கைதுசெய்யப்படுவதுடன், சட்டநடவடிக்கையும் எடுக்கப்படும் எனத் தெரிவித்தார். இக் காலகட்டத்தில் மக்கள் இறுக்கமான நடைமுறைகளை பின்பற்றி செயற்பட வேண்டுமெனவும், அத்தியாவசிய தேவையின்றி வெளியில் செல்ல வேண்டாம் எனவும் வேண்டுகோள் விடுத்தார்.

# மட்டக்களப்பு வாவியில் விடப்பட்ட 15 லட்சம் இறால் குஞ்சுகள்



மட்டக்களப்பு வாவியில் 15 லட்சம் இறால் குஞ்சுகளை விடுவிக்கும் நிகழ்வு கடற்தொழில் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நேற்று நடைபெற்றது.

மட்டக்களப்பு வாவியின் பிள்ளையாரடி மற்றும் வவுணதீவு பகுதிகளில் நேற்று காலை 4 மணிக்கு குறித்த நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வழிகாட்டலில் மட் டக்களப்பு மாவட்ட கடற்தொழில் திணைக் கள உதவிப் பணிப்பாளர் ருக்சான் குரூஸ் தலைமையில் குறித்த இறால் குஞ்சுகள் வாவியில் பாதுகாப்பாக விடுவிக்கப்பட்டன.

இங்கு கருத்துவெளியிட்ட மாவட்ட உதவிப் பணிப்பாளர் ரூக்சான் குரூஸ், மட்டக்களப்பு வாவியில் மீன்வளத்தை அதிகரிக்கவும் மீனவரின் வாழ்வாதாரத்தை உயர்த்தவும் குறித்த பணி முன்னெடுக்கப்படு வதாகவும் இதன் பலனை இன்னும் சில மாதங்க ளில் மீனவர்கள் அடைந்துகொள்வர் என்றும் தெரிவித்தார். அத்தோடு எதிர்காலத்தில் மேலும் இறால் குஞ்சுகளையும் மீன் குஞ்சுகளையும் விடு வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும் அவர் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் கடற்தொழில் அமைச்சரின் பிரதிநிகளாக, மட்டக்களப்பு மாநகரசபை உறுப்பினர் த.சிவானந்தராஜா மற்றும் சு.சியாந் ஆகியோருடன் மாவட்ட கடற்தொழில் திணைக்கள ஊழியர்களும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# ஓட்டமாவடியில் தனிமைப்படுத்தப்பட்ட கிராம மக்களுக்கு உலர் உணவுகள்

கொரோனாத் தொற்று அதி கரிப்பு காரணமாக தனி மைப்படுத்தப்பட்ட மக்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப் படும் உலர் உணவுப் பொதி கள் நாடளாவிய ரீதியில் தனி மைப்படுத்தப்பட்ட பிரதேசங் களுக்கு வழங்கப்பட்டு வரு கின்றன.

அந்த வகையில் ஓட்ட மாவடி பிரதேச செயலாளர் பிரிவில் தனிமைப்படுத்தப்பட்ட மாஞ்சோலை கிராம சேவகர் பிரிவு, மீராவோடை கிழக்கு மற் றும், மீராவோடை மேற்கு ஆகிய மூன்று கிராம சேவகர் பிரிவுகளுக்குமான உலர் உணவுப் பொதிகள் வழங்கும் வேலைத்திட்டம் ஓட்டமாவடி பிரதேச செயலாளர் வீ.தவ ராஜாவின் வழிகாட்டலில் இடம் பெற்று வருகின்றது.

இதன் அடிப்படையில் மாஞ் சோலை கிராம சேவகர் பிரிவில் உள்ள அரச உத்தி யோகத்தர்கள் தவிர்ந்த 1,211 குடும்பங்களுக்கு அரிசி, பால்மா, கோதுமை, சீனி, நூடில்ஸ் அடங்கலான உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டு வருகின்றன.

பத்தாயிரம் ரூபா பெறுமதி யான உலருணவுப் பொதியில் முதற்கட்டமாக ஐயாயிரம் ரூபா பெறுமதியான பொருள் கள் வழங்கப்பட்டு வருகின்றன.

குறித்த உலருணவுப் பொதிகளை வழங்கும் நிகழ் வில் கிராம உத்தியோகத்தர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத் தர்கள், கிராம அபிவிருத்தி சங்க பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு வீடு வீடாகச் சென்று உலர் உணவுப் பொதிகளை வழங்கி வருகின் றனர்.



# மாதாந்த வாழ்வாதாரம் பெறுவோருக்கு நேற்று கொடுப்பனவு வழங்கிவைப்பு

நாட்டில் தற்போது துரிதமாக பரவிவரும் கொரோனா வைரஸ் மூன்றாவது அலையின் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்காக அரசாங்கத்தினால் கொடுப்பனவு நாடு பூராகவும் வழங்கப்பட்டு வருகின்றது.

அந்த வகையில் கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகத்தினால் பிரதேச செயலாளர் எஸ்.எச்.முஸம்மிலின் வழிகாட்டலில் சமூக சேவைகள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் மாதாந்த வாழ்வாதார கொடுப்பனவு வழங்கப்பட்டு வருகின்றது.

கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலக பிரிவில் சமூக சேவைகள் திணைக்களத்தின் ஊடாக 1,798 நபர்களுக்கும், முதியோருக்கான தேசிய செயலகம் ஊடாக 634 நபர்களுக்கும், மாற்றுத்திறனாளிகள் தேசிய செயலகம் ஊடாக 159 மாற்றுத் திறனாளிகளுக்கும் மாதாந்த வாழ்வாதார கொடுப்பனவுகள் வீடுகளுக்குச் சென்று வழங்கப்பட்டு வருகின்றன.

இந்நிகழ்வில் பிரதேச செயலக சமூகசேவை உத்தியோகத்தர் ஏ.நஜீம், கிராம அதிகாரிகள், சமூகசேவை திணைக்கள உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டு கொடுப்பனவினை வழங்கி வைத்தனர்.

இதன்போது பிரதேச செயலக பிரிவிலுள்ள ஒன்பது கிராம அதிகாரிகள் பிரிவிலும் மாதாந்த கொடுப்பனவு பெறும் நபர்களுக்கு இருப்பதாறு லட்சம் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளதாக பிரதேச செயலாளர் எஸ்.எச்.முஸம்மில் தெரிவித் தார்.

# கொரோனா தொற்றால் உயிரிழந்தவர்களின் 660 உடல்கள் ஓட்டமாவடியில் நல்லடக்கம்

கொரோனாத் தொற்றின் காரணமாக மரணமடைந்த உடல்களை அடக்கம் செய்யும் ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் மஜ்மா நகரில் அமைந்துள்ள கொரோனா மை யவாடியில் நேற்று வியாழக்கிழமை மாலை வரை 660 உடல்கள் அடக்கம் செய்யப்பட் டுள்ளன என ஓட்டமாவடி பிரதேச சபை செய லாளர் எஸ்.எம்.சிஹாப்தீன் தெரிவித்தார்.

ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் மஜ்மா நகரில் அமைந்துள்ள கொரோனா மைய வாடியில் நேற்று வரை 622 முஸ்லிம்களின் ஜனாஸாக்கள் அடக்கப்பட்டுள்ளமையுடன் 15 இந்து உடல்களும், 14 கிறிஸ்தவ உடல்களும் 07 பௌத்த உடல்களும், 02 வெளிநாட்டவர்க ளின் உடல்களுமாக மொத்தம் 660 உடல்கள் அடக்கப்பட்டுள்ளன என பிரதேச சபை செயலா ளர் தெரிவித்தார்.

# இங்கிலாந்து – இந்தியா மகளிர் டெஸ்ட் போட்டி அறிமுகப்போட்டியில் ஃபாலி வர்மா சாதனை!

இந்திய மகளிருக்கு எதிரான டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்து மகளிர் அணி தனது முதல் இன்னிங்ஸில் 121.2 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 396 ஓட்டங்களை எடுத்த நிலையில் தனது இன்னிங்ஸை இடைநிறுத்திக்கொண்டது.

அடுத்து தனது இன்னிங்ஸை தொடங்கிய இந்தியா, நேற்றைய நாள் ஆட்ட முடிவில் 60 ஓவர்களில் 5 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 187 ஓட்டங்களை எடுத்தது. ஹாமன்பிரீத் கௌா 4 ஓட்டங்களோடும், தீப்தி சாமா ஓட்ட மெதனையும் பெறாமலும் களத்தில் இருந்தனர்.

இந்தியஅணியில்டெஸ்ட்அறிமுகத்தை மேற்கொண்ட 17 வயது வீராங்கனை ஃபாலி வர்மா 13 பவுண்டரிகள், 2 சிக்ஸாகளுடன் 96 ரன்கள் சேர்த்த நிலையில் சதத்தைத் தவறவிட்டு ஆட்டமிழந்தார். ஸ்மிருதி மந்தனா 78 ஓட்டங்களை எடுத்தார்.

இங்கிலாந்து தரப்பில் ஹீதா நைட் 2, கட் கிராஸ், நதாலி ஸ்கீவா, சோஃபி ஆயியோர் தலா ஒரு விக்கெட்டை கைப்பற்றினர்.

இந்திய மகளிர் அணியில் அறிமுகமான முதல் டெஸ்டில் இதற்கு முன்னர் 1995 இல் சந்தர்கந்தா கௌல் 75 ஓட்டங்கள் எடுத்ததே அதிகபட்சமாக இருந்தது. அந்தச் சாதனையை முறியடித்து முதல் டெஸ்டில் அதிக ஓட்டங்களை எடுத்த இந்திய வீராங்கனை என்கிற பெருமையைப் பெற்றுள்ளார் ஃபாலி வர்மா.





## விம்பிள்டனிலும் ஒலிம்பிக்கிலும் பங்கேற்கப்போவதில்லை

### ரபேல் நடால் டுவிட்டர் மூலம் அறிவிப்பு!

உலகின் டென்னிஸ் தரவரிசையில் மூன்றாம் நிலை வீரரான ஸ்பெயின் நாட்டின் ரபெல் நடால், சமீபத்தில் நடந்த பிரெஞ்ச் ஓபினில் அரையிறுதியில் செர்பியாவின் ஜோகோவிச்சிடம் போராடித் தோல்வியடைந்தார்.

இந்தமுறையும்பிரெஞ்ச்ஓபினில் பட்டத்தைக் கைப்பற்றி அதிக கிராண்ட்ஸ்லாம் வென்றவரான சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரரின் சாதனையை முறியடிக்கும் முனைப்புடன் களமிறங்கிய நடாலின் ஆசை நிறைவேறாமல் போனது.

இந்த நிலையில் வருகிற 28 ஆம் திகதி லண்டனில் ஆரம்பமாகும் விம்பிள்டன் தொடரிலும், அடுத்த மாதம் 23 ஆம் திகதி டோக்கியோவில் தொடங்கும் ஒலிம்பிக் போட்டியிலும் விளையாடப் போவதில்லை என்று நடால் அறிவித்துள்ளார்.

‘இந்த முடிவை நான் எளிதாக எடுத்து விடவில்லை. ஆனால் எனது உடல்நிலை பழைய நிலைக்குத் திரும்புவதற்கு ஓய்வு தேவைப்படுகிறது. உடல் சொல்வதைக் கேட்க வேண்டியது முக்கியம்’ என்று 35 வயதான நடால் தனது டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

## பாகிஸ்தான் சூப்பர் லீக்கிலிருந்து

## டூப்ளசிஸ் விலகுகிறார்?



கொரோனாப் பரவல் காரணமாக பி.எஸ்.எல். எனப்படும் பாகிஸ்தான் சூப்பர்லீக்ரி–20போட்டிகள்பாகிஸ்தானிலிருந்து அபுதாபிக்கு மாற்றப்பட்டன. இந்தத் தொடரின் 19 ஆவது லீக் போட்டியின்போது சக வீரருடன் ஏற்பட்ட விபத்தில் தலையில் காயமடைந்த தென்னாபிரிக்க வீரர் டூப்ளசிஸ் சிகிச்சை முடிந்து தங்கும் விடுதிக்குத் திரும்பியிருக்கிறார்.

மருத்துவமனையில் அவருக்கு ஸ்கான் எடுத்து பரிசோதிக்கப்பட்டது. பின்னர் மருத்துவர்கள் அறிவுரைப்படி அவர் ஓய்வு எடுத்து வந்தார். அவருக்கு மூளை அதிர்ச்சி ஏற்பட்டதற்கான சிகிச்சையும் அளிக்கப்பட்டது என தெரிவிக்கப்பட்டது.

மருத்துவமனையிலிருந்து திரும்பிய டூப்ளசிஸ், தற்போது விடுதிக்குத் திரும்பிவிட்டேன், குணமடைந்து வருகிறேன். சிறிதளவு நினைவு இழப்பு ஏற்பட்டுள்ளது. ஆனால், நான் சரியாகிவிடுவேன். விரைவில் களத்துக்கு திரும்புவேன் என நம்புகிறேன் என்று தெரிவித்திருந்தார். ஆனால், இப்போது அவர் தென்னாபிரிக்காவுக்குத் திரும்ப முடிவெடுத்துள்ளார் என்று கூறப்படுகிறது.

மீதமுள்ள பாகிஸ்தான் சூப்பர் லீக் போட்டிகளிலிருந்து டுபிளெசிஸ் விலகியுள்ளார் எனவும் விரைவில் நாடுதிரும்பவிருப்பதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன. மருத்துவர்களின் அறிவுரையின்படி இந்த முடிவை அவர் எடுத்திருக்கலாமென்று நம்பப்படுகிறது.

## டெஸ்ட் சம்பியன்ஷிப் போட்டி மழை காரணமாகப் பாதிப்பு

ஐ.சி.சி. டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் இந்திய - நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான இறுதிப்போட்டி மழை காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

சொளத்தாம்படனில் இன்று காலை ஆரம்பமாகவிருந்த இந்தப் போட்டியின் முதல் பகுதி ஆட்டம் மழையினால் முழுவதுமாகக் கைவிடப்பட நேர்ந்துள்ளது.




## யூரோ கிண்ணக் கால்பந்தாட்டத் தொடர் சாதனை கோலடித்த டென்மார்க் தோல்வி!

யூரோ கிண்ணக் கால்பந்தாட்டத் தொடரின் பி பிரிவுப் போட்டியில் டென்மார்க்கை பெல்ஜியம் 2-1 என்ற கோல் கணக்கில் வென்றுள்ளது.

இந்தப் போட்டி தொடங்கி 2 ஆவது நிமிடத்திலேயே டென்மார்க் வீரர் யூசுப் போல்சென் அடித்த கோல் ஐரோப்பிய சம்பியன்ஷிப் யூரோ கிண்ணத் தொடரின் 2 ஆவது அதிவிரைவு கோலானது. டென்மார்க்கின் மத்தியகள வீரர் பியர் எமில் பெல்ஜியத்திடமிருந்து பந்தை எடுத்துச் சென்று யூசுப் போல்சனிடம் கொடுக்க, அவர் அதனை கோலாக்கிட பெல்ஜியம் அணியே அதிர்ச்சியடைந்தது. முதல் பாதியில் பெல்ஜியம் சுமாராகத்தான் ஆடியது. ஆனால் 2 ஆவது பாதி தொடங்கி 9 ஆவது நிமிடத்தில் பெல்ஜியத்தின் ஹசார்ட் அடித்த கோல் டென்மார்க்கின் சாதனைக் கோலைச் சமன் செய்தது. அடுத்து, ஆட்டத்தின் 70 ஆவது நிமிடத்தில் பெல்ஜியத்தின் டிபுருய்ன் அடித்த கோல் அவர்களை முன்னிலை பெறச்செய்தது. இறுதியில் 2-1 என்று டென்மார்க்கை வீழ்த்தி வெற்றிபெற்றது பெல்ஜியம்.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# எங்கள் கடலில் எங்களின் வளத்தை பயன்படுத்த அனுமதியைத் தாருங்கள்

## அமைச்சர் டக்ளஸிடம் வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் உருக்கம்

எங்களின் கடலில் எங்களின் வளத்தை நாங்கள் பயன்படுத்திக் கொள்வதற்கான அனுமதிகளைப் பெற்றுத் தாருங்கள் என்று வடமராட்சி கிழக்கு கடற்றொழில் சங்கங்களின் பிரதிநிதிகள் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடும் நோக்கில் நேற்று (வியாழக்கிழமை) மருதங்கேணியில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே, குறித்த கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற தடை செய்யப்பட்ட சட்ட விரோத தொழில் முறைகளைக் கட்டுப்படுத்துவதுடன் பாரம்பரியமாக சிறுதொழிலில் ஈடுபடுகின்றவர்களை பாதிக்காத வகையில்,

பிரதேசத்தின் பெரும்பாலானவர்களின் நலன்களின் அடிப்படையில் தொழில் முறைகளை ஒழுங்குபடுத்தும் வகையில் நேற்றைய கலந்துரையாடலில் கருத்துக்கள் பரிமாறப்பட்டிருந்தன.

இதன்போது கருத்து தெரிவித்த கடற்றொழில் சங்கங்களின் பிரதிநிதிகள், உழவு இயந்திரங்களைப் பயன்படுத்தியின்ஞ் மூலம் கரைவலைத் தொழிலில் ஈடுபடுதல், மற்றும் சுருக்கு வலைத் தொழில் மற்றும் கடலட்டை பிடித்தல் போன்ற சர்ச்சைக்குரிய தொழில் முறைகளில் ஈடுபட விரும்புகின்றவர்களுக்கு, அவசியமான நிபந்தனைகளுடன் அனுமதிகளை வழங்குமாறு கோரிக்கை விடுத்தனர்.



மேலும், நாட்டின் ஏனைய சில பகுதிகளில் அனுமதிக்கப்பட்டுள்ள தொழில் முறைகள் வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் தடை செய்யப்பட்டிருக்கின்றன எனவும், அவ்வாறான பாகுபாடுகள் ஒரே நாட்டினுள் இருக்கக் கூடாது எனவும் வேண்டுகோள் விடுத்ததுடன், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கடற்றொழில் அமைச்சராக இருக்கின்ற தற்போதைய காலகட்டம் தமக்கான காலம் என்றும், இந்தக் காலப் பகுதியில் தங்களுடைய வளத்தைத் தாங்கள் பயன்படுத்திக் கொள்ளும் வகையிலான ஏற்பாடுகள் மேற்கொள் ளப்பட வேண்டும் எனவும் தெரிவித்தனர்.

இதன்போது கருத்து தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா –

நான் இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்தவனாகவும் உங்களில் ஒருவனாகவும் இருக்கின்ற போதிலும், இந்த நாட்டின் அனைத்து மக்களுக்குமான அமைச்சராகவே இருக்கின்றேன். என்னுடைய அமைச்சு செயற்பாடுகள் இனம் மற்றும் பிரதேசம் சார்ந்தவையாக இருக்க முடியாது.

எனினும், ஒவ்வொரு பிரதேசம் தொடர்பான தீர்மானங்களும், அந்தப் பிரதேசத்தில் வாழ்கின்ற பெரும்பாலானோரின் கருத்துக்களின் அடிப்படையிலானவையாகவே இருக்கும்.

காலியில் மேற்கொள்ளப்படுகின்ற தீர்மானங்கள் காலியில் வாழுகின்ற பெரும்பாலான மக்களின் நலன் சார்ந்தவையாக இருக்கும். அதேபோன்று வடமராட்சி கிழக்கில் மேற்கொள்ளும் தீர்மானங்கள், இந்தப் பிரதேசத்தின் பெரும்பாலானவர்களின் நலன் சார்ந்தவையாக இருக்கும்.– என்று தெரிவித்தார்.

மேலும், ஒவ்வொரு தொழில் முறைகளையும் மேற்கொள்ள விரும்புகின்றவர்கள், அதுதொடர்பான கோரிக்கைகளை கடற்றொழில் உத்தியோகத்தர்களிடம் சமர்ப்பிக்குமாறு கடற்றொழில் சங்கப் பிரதிநிதிகளுக்கு தெரிவித்ததுடன், ஒவ்வொரு தொழில் முறைகள் தொடர்பாகவும் பிரதேச மக்களின் கருத்துக்களை அறிந்து தனக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு கடற்றொழில் உத்தியோகத்தர்களையும் கடற்றொழில் அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

மேலும், கடற்றொழில் உத்தியோகத்தர்களின் அறிக்கையை ஆராய்வதுடன், ஒவ்வொரு தொழில் முறைகளிலும் இருக்கும் சாதக பாதகங்களை துறைசார் நிபுணர்களுடன் கலந்துரையாடி இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்தார்.

அதுவரை, அனுமதியின்றி சுருக்கு வலைத் தொழிலில் ஈடுபடுதல், கரை வலைத் தொழிலுக்கு உழவு இயந்திரம் பயன்படுத்தல், வெளிச்சம் பாய்ச்சி மீன் பிடித்தல், குழை போட்டு கணவாய் பிடித்தல், டைனமைற் பயன்படுத்தல், அனுமதியின்றி கடலட்டை பிடித்தல் போன்ற தொழில் முறைகளில் ஈடுபடுகின்றவர்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள் ளப்படும் எனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கிளிநொச்சி மாவட்ட கோவிட் நிலைமைகள் அமைச்சர் டக்ளஸ் தலைமையில் ஆராய்வு

கிளிநொச்சி மாவட்ட கொவிட் –19 நிலைவரம் உட்பட பல்வேறு விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடும் விசேட கலந்துரை யாடல் ஒன்று மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில், மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், பிரதேச செயலாளர்கள், மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கலந்து கொண்டு நிலைமைகள் தொடர்பில் கலந்துரையாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை கடந்த காலங்களில் நிலவிய யுத்த சூழல் காரணமாக கைவிடப்பட்டுள்ள கரும்புத் தோட்டக் காணியில் மீண்டும் கரும்பு செய்கை உட்பட்ட பயிர் செய்கைகளை மேற்கொள்வது தொடர்பாக கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தோனந்தாவால் சமூக ஆர்வலர்களுடன் கலந்துரையாடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மண்கும்பி சரிந்து வீழ்ந்தது போக்குவரத்துக்குப் பாதிப்பு

மண்கும்பி சரிந்ததில் கௌதாரி முனைக்கான போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட கௌதாரிமுனை கிராமத்தில் இயற்கையாக அமைந்துள்ள மண்திட்டி சரிந்து வீதியை குறுக்கிட்டுள்ளது.

இதனால் குறித்த பிரதேசத்துக்கான போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. வருடம் தோறும் குறித்த பிரச்சினை எழுந்து வரும் நிலையில், போக்குவரத்தை சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.





## சட்டவிரோத மண் அகழ்வு தர்மபுரத்தில் ஐவர் கைது

தர்மபுர பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைய கடந்த புதன்கிழமை புளியம்பொக்கணை கலவெட்டித்திடல் பகுதியில் சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் மூன்று டிப்பர்களும் அதன் சாரதிகள் மூவரும் பொலிஸாரை உளவு பார்த்த குற்றச்சாட்டில் இருவரும் கைதுசெய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட ஐவரும் தருமபுர பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டு மேலதிக விசாரணைகள் நடைபெற்ற பின்னர்பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர் என தர்மபுர பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt.Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 18.06.2021 இல் வெளியிடப்பெற்றது.